நல்லூர் கிளை நூலகம்
மாநகர ... ம்
யாழ்ப்பாணம்

முரசொலி

பக்கங்கள் நான்கு
விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 163 ஆங்கீரச சித்திரை 26 ( 08 . 05 . 1992 ) வெள்ளி

## பயிலுநர் ஆசிரியராக நியமிக்கப்பட்ட சிலர் அவ்வப்பாடங்களில் தகைமையற்றவர்களாம்

யாழ் மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட சிலர் அவ்வப் பாடங்களில் தகைமையற்றவர்களாக உள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. ஆங்கிலம் உட்பட சில முக்கிய பாடங்களுக்கு நியமிக்கப்பட்டவர்களே இவ்வாறு உள்ளதாகவும், பயிலுநர் ஆசிரியர் தொலைக் கல்வி பாடநெறி வகுப்புக்களை பின்பற்றுவதுகூட தமக்கு சிரமமாக உள்ளதாகவும், விருப்பமான வேறு பாடத்தை மாற்றித் தருமாறும் கல்வி உயர் அதிகாரிகளிடம் தனிப்பட்ட முறையில் கேட்டுவருவதாகவும் தெரியவருகிறது. ஆனால் கல்விச் சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின்படி பயிலுநர் ஆசிரியர்கள் எப்பாடத்துக்கு நியமிக்கப்பட்டார்களோ அப்பாடநெறியை விட்டு வேறு பாடநெறிக்கு மாற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (001)

# மன்னாரில் ஒபரேஷன் கிறீன்பெல்ட் - 3

# முறியடிக்கப்பட்டது எப்படி?

## புலிகளின் மன்னார் சிறப்புத் தளபதி சுபன் விளக்கம்

மன்னாரில் முருங்கன் பகுதியை இராணுவம் கைப்பற்றி விட்டதாக ஸ்ரீலங்கா தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் செய்த பிரசாரத்தை மன்னார் மாவட்ட புலிகளின் சிறப்புத் தளபதி சுபன் மறுத்துள்ளார். அரசின் இப்பிரசாரம் பொய்யானது என அவர் தெரிவித்தார்.

மன்னாரில் கடந்த வாரம் நடைபெற்ற ஒபரேஷன் கிறீன் பெல்ட் - 3 என்ற இராணுவ நடவடிக்கையில் புலிகளின் எதிர்ப்பின்றி முருங்கனை கைப்பற்றியதாக ஸ்ரீலங்கா செய்திகள் வெளியிட்டிருந்தன.

இராணுவ நடவடிக்கையின் முதல் நாளன்று படையினர் வங்காலை, தள்ளாடி மாந்தை முகாம்களிலிருந்து 50 வாகனங்களின் உதவியுடன் வெளியேறினர். இவர்கள் முகாம்களின் அருகில் வைத்தே தாக்கப்பட்டுத் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து சென்ற கிழமை, தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான படையினர் முன்னேற ஆரம்பித்தனர்.

இவர்களை சிறிது தூரம் முன்னேறவிட்ட புலிகள் அணியினர், புதிய போர்முனைகளிலிருந்து படைகள் மீது தாக்குதல்களை ஆரம்பித்தனர்.

— 04ஆம் பக்கம் பார்க்க

## ★ தாய்லாந்து பிரதமர்

## நான் பதவி விலகினால் பௌத்தமதம் அழிந்துவிடும்

தாய்லாந்து பிரதமராக பதவி ஏற்றுக்கொண்ட இராணுவத் தளபதி சுசிந்திரா பொதுமக்களை பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தி பதவி விலகுமாறு கோரியும் பதவி விலக மறுத்துவருகிறார்.

பதவி விலக மறுப்பதற்கு அவர் கூறும் காரணங்களில் ஒன்று, நான் பதவி விலகினால் நாட்டில் பௌத்த மதம் அழிந்து விடும் கம்யூனிஸ்ட்டுகள் ஆட்சியை...

— 04ஆம் பக்கம் பார்க்க

## தொப்பிகலப் பகுதியில்

## 3 படையினர் பலி, அதிகாரிகாயம்

கிழக்கில் செங்கலடியிலிருந்து தொப்பிகலை நோக்கிச் சென்ற இராணுவத்தினர் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் 3 படையினர் பலியாகினர் 7 படையினர் படுகாயமடைந்தனர் என இராணுவப் பேச்சாளர் கேணல் சரத்முனசிங்க நேற்று தெரிவித்தார்.

படுகாயமடைந்த படையினரில் ஒருவர் அதிகாரி தரத்தைச் சேர்ந்தவர் எனவும் அவர் கூறினார்.

● பத்திரிகையாளர் கைது ஆணை விவகாரம்

## இந்திய உயர்நீதிமன்றம் தமிழக அரசிற்கு எச்சரிக்கை

இலஸ்ரேட்டட் வீக்லி சஞ்சிகையின் முன்னாள் செய்தியாளர் கே. பி. சுனிலை கைது செய்வதற்கு எதிராக உயர் நீதிமன்றம் பிறப்பித்த தடை உத்தரவை அவமதிப்பது நீதிமன்ற அவமதிப்புக் கிரிமினல் குற்றமாகும் என தமிழக அரசை உயர்நீதிமன்றம் நேற்று எச்சரித்துள்ளது.

இச்செய்தியாளரை கைது செய்வது தொடர்பாக உயர் நீதிமன்றம் கடந்த 24ஆம் திகதி தடை உத்தரவு ஒன்று பிறப்பித்தது. எனினும் தமிழக சட்டப்பேரவை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா நீதிமன்ற உத்தரவு சட்டப் பேரவையை கட்டுப்படுத்தாது என அறிவித்தார். இதைத் தொடர்ந்து கே. பி. சுனில் தம்மைக் கைது செய்வதைத் தடுக்க மீண்டும் உயர்...

— 4 ஆம் பக்கம் பார்க்க

## முத்தையா டில்லி விஜயம்

தமிழக சட்டப்பேரவை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா நேற்றுக்காலை விமானம் மூலம் புதுடில்லி விரைந்தார். டில்லி விஜயத்திற்கான காரணம் தெரியவில்லை.

## முஸ்லிம் கிராமப் படுகொலை விசாரணைக்குழு அமைப்பு

அண்மையில் பொலநறுவையில் அளுஞ்சிப்பொத்தானை முஸ்லிம் கிராமத்தில் நடைபெற்ற படுகொலைகள் தொடர்பாக விசாரணை நடத்த மூவர் கொண்ட விசாரணைக்குழுவை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

நீதிபதி ஜெயலத், மேஜர் ... உட்பட மூவர் இவ்விசாரணைக்குழுவில் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் இக்கிராமத்திற்கு ஏற்கனவேசென்றுள்ளதாகவும் இவ் இனக் கலவரக் கொலை தொடர்பான அறிக்கையை குழுவினர் அரசிடம் சமர்ப்பிப்பர் எனவும்பிரேமதாச விசாரணைக்குழுவினர் தெரிவிக்கின்றனர்...

## தென்பகுதி ஆயர்கள் யாழ். வருகின்றனர்

கொழும்பு அதிமேற்றிராணியார் அதி. வந். நிக்கலஸ் மார்க்ஸ் பெர்ணான்டோ தலைமையில் ஆறு ஆயர்கள் நாளை சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றனர்.

யாழ் ஆயர் அதி. வண. இ. பொ. ...

பின் போன், வெள்ளி பவள விழாவில் கலந்துகொள்வதற்கே இவர்கள் வருகின்றனர் இவர்களுடன் இலங்கை குருமாரும் வரவுள்ளனர்.

அதி. வண. கலாநிதிகளான டொன் பிகெவெண்டர் (காலி), ஜோஸப் குணவர்த்தனா

— 4 ஆம் பக்கம் பார்க்க

## திருவடிநிலைகடற்பகுதியில் திடீர்மையப் புயல்!

சுழிபுரம் திருவடி நிலை கடற்பரப்பில் நேற்று முன்தினம் நண்பகல் 'சூறாவளி' என தமிழில் கூறப்படும் திடீர்மைய நீர்முனைப் புயல் ஏற்பட்டது.

இதனால் கடலின் ஒருபகுதியிலிருந்து நீர் விண்ணை நோக்கி வேகமாக இழுக்கப்பட்டது அரிதாகவே கடற்பகுதிகளில் ஏற்படும் இந் நிகழ்வை கரையோர மக்கள் நேரில் அவதானித்தனர்.

சிறிது நேரத்தில் இதுபெரும் மழையாக அயற்கிராமங்களில் வீழ்ந்தது. 18

## உற்பத்தித்திறன் கொடுப்பனவு விரைவில் கிடைக்கும்

யாழ் மாவட்டத்தில் இன்னும் முப்பதாயிரம் பேருக்கு உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு கொடுப்பனவு நாலாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன...

கொழும்பிலிருந்து இங்கு வந்ததும் வங்கிகளினூடாக இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

1990 ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பமானதை ...

முஸ்லிம் கிராமத்தில் நடை பெற்ற படு கொலைகள் தொடர்பாக விசாரணை நடத்த மூவர் கொண்ட விசாரணைக் குழுவை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

நீதிபதி ஜெயலத், மேஜர் ஜெனரல் பாலரத்ன ராஜா

ருள்ளனர். இவர்கள் இக்கிராமத்திற்கு ஏற்கனவே சென்றுள்ளதாகவும் சில தினங்களில் கொலை தொடர்பான அறிக்கையை குழுவினர் அரசிடம் சமர்ப்பிப்பர் எனவும் பிரட்மன் வீரக்கோன் தெற்றுத் தெரிவித்தார்.

மார்க்ஸ் பெர்ணாண்டோ தலைமையில் ஆறு ஆவர்கள் நாளை சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றனர்.

யாழ் ஆயர் அதி. வண. தியோகுப்பிள்ளை ஆண்டகை

தற்கே இவர்கள் வருகின்றனர். இவர்களுடன் சில குருமாரும் வருவுள்ளனர்.

அதி. வண. கலாநிதிகளான டேசன் விக்வெலடர் (காலி), ஹென்றி குணவர்த்தனா

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ★ லங்காதிப செய்திக்கு மறுப்பு

யாழ் மாவட்டத்தில் இன்னும் முப்பதாயிரம் பேருக்கு உதவுத்திறமை வாக்குகப்பு கொடுப்பனவு நாலாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கான பணம் விசுவிரை

வில் கொழும்பிலிருந்து இங்கு வந்ததும் வங்கிகளினூடாக இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

1990 ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பமானதையடுத்து இக்கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது. (47)

## ★ புலிகள் தலைவர் பிரபாகரன்

# நாடு கடத்துமாறு இந்தியா முறைப்படி கோரவில்லை

புலிகளின் தலைவர் பிரபாகரனை நாடுகடத்துமாறு இந்தியா இன்னும் முறைப்படி கோரவில்லை அப்படிக்கோரப்படுமானால் அக்கோரிக்கை ஸ்ரீலங்கா சட்ட நடைமுறைகளுக்கேற்ப ஆராயப்படும் என வெளியுறவுச் செயலாளர் பெர்னாட் திலகரட்ன நேற்று தெரிவித்தார்.

செய்தியாளர்களிடையே பேசிய அவர், பிரபாகரனை நாடுகடத்த அரசு மறுத்ததாக வெளிவந்த செய்திகள் ஆதாரமற்றவை என மறுத்தார்.

# சமரஸ யோசனையுடன் கொழும்பிற்கு ஈ. ஜ. மு. உறுப்பினர்கள் செல்லவில்லை

இனப்பிரச்சினைக்கான சமரஸ யோசனைகளுடன் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பு செல்வதாக நேற்றைய லங்காதிப வெளியிட்ட தலைப்புச்

செய்தி தவறானது என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

லங்காதிப இன்றைய பத்திரிகை தனது செய்தியில் பாராளுமன்றத்தை பகிஷ்கரித்த

ஈழவர் ஜனநாயக முன்னணி உறுப்பினர்கள் இனப்பிரச்சினைக்கான சமரஸ முயற்சிக்காக மீண்டும் கொழும்பு வர ஆயத்தமாயுள்ளனர் என்றும், இவர்கள் முதலில்

பாராளுமன்ற தெரிவுக்குழுவையும் பின்னர் ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களை சந்திப்பர் என்றும், இவர்களின் கொழும்பு

— 04 ஆம் பக்கம் பார்க்க

(Lond.) Ph. D. (Lond)

on

SOCIO-CULTURAL CHALLENGES IN CHILD CARE

will be held on

Tuesday 12 th May 1992

at 3-30 p. m.

in the

Kailasapathy Auditorium

University of Jaffna

All Are Welcome

-Registrar

University of Jaffna

Thirunelvely.

05014


கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் ஆகியோர் ஞாபகார்த்தமாக கடற்புலிகளால் நடாத்தப்பட்ட விளையாட்டுப்போட்டிகளின் முதலாம் நாள் நிகழ்ச்சிகள் சிறப்பாக

சல் நீச்சல் போட்டிகள், கம்பமரம் ஏறுதல் போட்டிகள், சுழிஓட்டப்போட்டிகள், பந்து கடத்தும் போட்டிகள் என்பன பகுதிகளிலிருந்து இறங்கு துறையில் நடைபெற்றன

(11)

## இரு நாள் கருத்தரங்கு

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பிரிவிலுள்ள பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகளின் மத்தியஸ்தர்களாக கடமையாற்றுபவர்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட பிரதிக் கல்வி பணிப்பாளர் திரு.எஸ்.கே. மகேசவேலு தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் உதவிக் கல்விப்பணிப்பாளர் (உடற்கல்வி) திரு க. நாகமணி, திரு அருணகிரிராஜா ஆகியோர் கலந்துகொண்டு விரிவுரை நிகழ்த்தினார்கள்.

(18)

அமைத்து தொடர்ந்து இவ் மக்களுக்கு நற்சேவையாற்றி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

(45)

ளைத் தொடர்பு கொண்ட பொழுது அதற்காக ஒதுக்கிய பணம் இதுவரை கிடைக்

## இடம்பெயர்ந்தோருக்கு உடுபுடவை, பாத்திர உதவிகள்

பூநகரிப் பகுதியில் இடம்பெற்ற நடவடிக்கைகளின் காரணமாக பாதிப்புற்று இடம்பெயர்ந்த அகதிகளுக்கு உதவும் வகையில் ஒக்ஸ்பாம் நிறுவனம் சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான உடுபுடவைகள் பாத்திரங்களை வழங்கியுள்ளது.

பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்ட இப் பொருள்கள் பள்ளிக்குடா கல்முனை வினாசியோடை மண்ணித்தலை கௌதாரிமுனை வெட்டுக்காடு பரமன்கிராய் நெற்புலவு வில்லடி ஞானிமடம் சித்தன் குறிச்சி மற்றும் இராணுவ நடவடிக்கையினால் முற்றாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இக் கழக வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது


## அறிவுரைகள்

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொள்கையின் படி கர்ப்பிணித்தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், வளரும் குழந்தைகள் ஏனையோர்களுக்கும் சிறந்த முறையில் போதனையை கொடுத்து இரண்டாயிரமாம் ஆண்டு முடிவில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரோக்கியமான சமுதாயத்தை அமைக்க முடியும். எல்லாம் இலவசம் முகவரி. கதிர்காமத்தம்பி ஜெகநாதன் பொது சுகாதார விரிவுரையாளர் 66 சினியர் ஒழுங்கை யாழ்ப்பாணம்

05013

நல்லூர் இளை நூலகம்
மாநகர ...றம்
யாழ்ப்பாணம்

# நீர்கொழும்புக்கு வந்தனராம் யாழ். மெக்கானிக்குகள்

யாழ்ப்பாணத்திலிருந்து 3 மெக்கானிக்மார் நீர்கொழும்புக்குக் கூட்டிச் செல்லப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் கூறியதாகக் கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

நீர்கொழும்பில் சுமார் 10 வருடகாலமாக உபயோகிக்கப்படாமலிருந்த பழைய மோட்டார் ஒன்றைத் திருத்துவதற்கு இவர்கள் மூவரும் கொண்டுவரப்பட்டதாகவும் இது பொலிஸாருக்கு திகைப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் இச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பில் கைது செய்யப்பட்ட 17 இளைஞரான சந்தேக நபர்களோடு இம் மூவரும் கைதாகினர் என்றும் நீர்கொழும்பில் கைதேர்ந்த மெக்கானிக்மார் இருக்கையில் யாழ்ப்பாணத்திலிருந்து இம் மூவரும் கொண்டுவரப்பட்டனர் என்பது குறித்து பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் மோட்டார் குண்டு வெடிப்பின்போது இளைஞர்கள் பழைய ஹில்மன் காரொன்றை உபயோகித்ததைப்போல குண்டொன்றை வெடிக்கச் செய்வதற்கு இப் பழைய காரை உபயோகிக்க முயன்றார்களா என விசாரணை செய்வதாகப் பொலிஸார் தெரிவித்ததாகவும் இச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஓய்வூதியர் சம்மேளன கூட்டம்

வட மாநில ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனத்தின் மாதாந்த நிர்வாகசபைக் கூட்டம் யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறும்.

# சமூக சேவையாளர் பயிலுநர் சங்கம் உருவானது

படித்த இளைஞர், யுவதிகளைக் கொண்ட மக்கள் மயப்படுத்தும் சமூக சேவையாளர் பயிலுநர் சங்கம் பாண்டியன்தாழ்வுள்ள சமூக பயணி மனையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

அமைப்பாளர் க. இங்கைநாதர் தலைமையில் இவ் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது.

யாழ் மாவட்டத்திலுள்ள படித்த இளைஞர், யுவதிகளிடையே வேலையில்லாத் திண்டாட்டம் தலைதூக்கியுள்ளது. மக்கள் மயப்படுத்தும் சமூக சேவை பயிலுநர் திட்டத்தின் கீழ் இதனை ஓரளவிற்கேனும் நிவர்த்தி செய்யலாமென்ற நோக்குடன் இச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது என்று அமைப்பாளர் தெரிவித்தார்.

சமூக சேவையின் முக்கியத்துவம், வேலைத்திட்டங்களின் அமைப்பு, அத் திட்டங்களினால் ஏற்படும் நன்மைகள், இளம் சமுதாயத்தின் முன்னேற்றப்பாதைக்கு உதவும் பணிகள் பற்றி இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. (14)

# கி. அ. சங்கங்கள் புனரமைப்பு

யாழ் மாவட்டத்திலுள்ள சகல கிராம அபிவிருத்திச் சங்கங்களும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இக் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுப் புதிய பதிவிலக்கங்கள் வழங்கப்பட வேண்டுமென்று யாழ். அரசாங்க அதிபர் பணித்துள்ளார்.

யாழ். கிராம அபிவிருத்தித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஓ. பாலகிருஷ்ணன் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். சகல கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் தமது பகுதியிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களைப் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். (14)

# 'நலிவுற்ற மக்களுக்கு உதவுவதே நோக்கம்'

“செவர் நிறுவனத்தின் உதவிகள் மக்கள் நன்மைக்காகவே. எங்கு பொருளாதார ரீதியான நலிவடைந்த மக்கள் வாழ்கிறார்களோ அவர்களை நாடிச்சென்று உதவியும் ஊக்கமும் உற்சாகமும் அளித்து சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுத்தி வழிகாட்டுவதே இந்த நிறுவனத்தின் நோக்கமாகும்.”

பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகத்தினால் தனக்கு அளிக்கப்பட்ட பிரிவு உபசார வைபவத்தின்போது செவர் நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட பணிப்பாளர் திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கழகத் தலைவர் திரு. பொ. தம்பிராசா தலைமையில் இடம்பெற்ற இவ் வைபவத்தில் கழகச் செயலாளரும் பூநகரி ப.நோ.கூ. சங்கப் பொது முகாமையாளருமான திரு. ந. பாலசுப்பிரமணியம் உரையாற்றுகையில்,

“செவர் நிறுவனம் அண்மைக்காலத்தில் பூநகரி உ.வி. அதிபர் பிரிவில் சுமார் 59 லட்சம் ரூபாவை ஏழை விவசாயிகளின் நலனுக்காக செலவழித்துள்ளது. 1500 ஏக்கரில் 600 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளவும் 300 ஏக்கர் சிறுதானியமும் 160 ஏக்கரில் மிளகாய் செய்கையும் 140 ஏக்கரில் மரக்கறிவகைகளையும் உற்பத்திசெய்வதற்கு இந்நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது” எனத் தெரிவித்தார். (31)

## நோயாளர் பாதிப்பு

வேரவில் அரசினர் ஆஸ்பத்திரி டாக்டர் இன்றி பல காலமாக மூடப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். 17

## விளையாட்டுப் போட்டி

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட மட்டத்திலான விளையாட்டுப்போட்டி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை பண்டத்தரிப்புக் கல்விக்கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். வி. மகேசவேலு மேற்கொண்டுள்ளார்.

கடந்த தவணையில் கோட்டங்களிடையே நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் இப் போட்டியில் பங்குபற்றுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. 18

## வருடாந்த உற்சவம்

வட்டுக்கோட்டை மேற்கில் சின்னக்கதிர்காமம் என்றழைக்கப்படும் அருள்மிகு ஸ்ரீ முருகன் கோவில் வருடாந்த மகோற்சவம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. திருவிழாக்கள் தொடர்ந்து பதினொரு நாட்கள் நடைபெறும்.

பிரசித்திபெற்ற இக்கோவிலின் தேர்த்திருவிழா இம்மாதம் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் தீர்த்தத்திருவிழா 16 ஆம் திகதி சனிக்கிழமை விசாக தினத்தன்றும் நடைபெறும். 18

## விலைவீழ்ச்சி

வலிகாமம் மேற்குப் பகுதியில் புகையிலைக்கன்றுகளின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

வட்டுக்கோட்டை, சங்கானை, பண்டத்தரிப்பு ஆகிய பகுதிகளில் இம் முறை விவசாயிகள் புகையிலைச் செய்கையில் பெருமளவு ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அண்மையில் இப் பகுதியில் பெய்த மழையை அடுத்து இந்த விலை வீழ்ச்சி ஏற்பட்டது. 18

# 'தமிழீழக் கடல் எல்லை பாதுகாக்கப்படுவது உறுதி'

“தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தை உலகம் பாராட்டுவது போல கடற்புலிகளின் சாதனைகளையும் உலகப் பத்திரிகைகள் பாராட்டுகின்றன.

“இந்த மண் எங்களின் சொந்த மண் என்று உரிமை கொண்டாடும் தமிழீழ மக்களின் இந்தக் கடலும் எங்களின் சொந்தக் கடல். இதில் ஒரு அடி கடலைக் கூட விட்டுக் கொடுக்கமாட்டோம்” என்று கடற்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் அமுதன் கூறினார்.

தமிழீழக் கடற்புலிகளின் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா வல்வை திருவில் புனித மைதானத்தில் கடற்புலிகளின் மகளிர் பிரிவு பொறுப்பாளர் செல்வி நளாயினி தலைமையில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் ‘இந்த எமது வளமான கடற்பிராந்தியத்தில் அந்நியரான இந்தியன், சிங்களவர்கள் எமது மூலவளங்களை அபகரிக்கிறார்கள். இவர்களை கூடிய விரைவில் நாம் விரட்டியடித்து எமது வளத்தினை நாம் முற்று முழுதாகப் பயன்படுத்த வேண்டும்’ என்றார்.

யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ் மாவட்ட கடற்புலிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் கிரனி மாஸ்டர், மன்னார் மாவட்ட குணமன்னா, தமிழீழ கடற்புலிகளின் பொறுப்பாளர் சூசை ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இறுதியில் கடலில் உயிர்நீத்த 87 கடற்புலிகளின் ஞாபகார்த்தமாக அவர்களின் பெற்றோர்களால் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (09)

# கிராம அபிவிருத்திக்கென நிதி ஒதுக்கீடு

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட கிராமங்களின் அத்தியாவசிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கென அரசினால் ஆறு லட்சத்து எழுபத்தொன்பதாயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியை முன்னுரிமை அடிப்படையில் கிராமங்களின் அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்த விசேட ஆணையாளர் செல்வி ரூபினி கனரத்தினம் தீர்மானித்துள்ளார்.

இத் திட்டங்களைச் செயற்படுத்தும் முகமாக அபிவிருத்திக் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. (18)

# சிறந்த ஊழியருக்கு விருது

தபால் திணைக்களம் சிறப்பான ஊழியருக்கு விருது வழங்கும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் திறமையானோர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு விருது வழங்கப்படவுள்ளது.

இந்த விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் யூன் மாதம் 11ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

சிறந்த தபால் நிலையம், உபதபால் நிலையம், சிறந்த உத்தியோகத்தர், தபாற்சேவகர் ஆகியோர்களுக்கே விருதுகள் வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (06)

# குருவாயூர் பக்தர் வழக்கு

குருவாயூர் பக்தர்கள் சிலர், குருவாயூர் கோவில் நிர்வாகிகள் பாரபட்சம் காட்டுவதாகக் கூறி அவர்கள் மீது நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்துள்ளார்கள்.

முக்கிய பிரமுகர் ஒருவரும் அவரின் சகாக்கள் 9 பேரும் குருவாயூர் கோவிலில் காலை மாலை பூசை செய்வதற்கு நடைமுறையில் உள்ள கட்டுப்பாடுகளை சமீபத்தில் மீறிச்சென்று இப் பூசைகளை நடத்தியதனாலேயே பிரச்சினை உருவாகியுள்ளது.

இக் கோவிலில் நினைத்தவுடன் போய் பூசையை நடத்திவிட்டு வந்துவிட முடியாது. இப் பூசைக் கட்டணமான ரூபாய் 17 ஆயிரத்து ஐந்நூறு ரூபாவைச் செலுத்தி பதிவுசெய்து கொள்ள வேண்டும். இப்படி பதிவுசெய்து காத்திருப்போர் பட்டியல் மிக நீளமானது. இப்பொழுது பதிவு செய்தால் அவர்களின் முறைவர 2007 ஆம் ஆண்டு ஆகும் என்று கூறப்படுகிறது.

பூசை செய்வதற்காக காத்திருப்போர் பட்டியலில் ஜனாதிபதி வெங்கட்ராமன், சந்திரசுவாமிகள், கஷோகி ஆகிய பிரமுகர்களின் பெயர்களும் இருப்பதாக ‘இந்தியா டுடே’ இதழ் மேலும் தெரிவித்துள்ளது (16)

## பரீட்சார்த்த முயற்சி வெற்றி

நடுத்தர வீச்சுடைய தரையிலிருந்து தரைக்கு ஏவும் ஏவுகணை ஒன்றை இந்தியா நேற்று வெற்றிகரமாகப் பரிசோதித்ததாக பி.ரி.ஐ. செய்தி தாபனம் தெரிவித்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## கற்கைநெறி

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 1991/92 கல்வியாண்டிற்கு பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாக பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடம் இருந்து 1992 ஜூன் 6ஆம் திகதிவரை விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

1. வர்த்தக முதுநி கற்கைநெறி
2. கலை முதுநி கற்கை நெறி
3. பொதுக் கலை மாணி பகுதி 1
4. சிறப்புக் கலை மாணி பகுதி 1
5. வர்த்தக மாணி பகுதி 1

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக்கலை மாணி கற்கைநெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம் (இந்து நாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யியல், அரசறிவியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம்)

விண்ணப்பப் படிவங்களும் உரிய விவரங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வெளிநிலைப் பதிவு தேர்வு அலுவலகத்தில் இருந்து நேரடியாகவோ தபால் மூலமாகவோ 1992 ஏப்ரல் 20-ம் திகதி தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாக பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறாப்பரிடம் 50/-ரூபா செலுத்திய மைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிதியாளருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளை/தபால் கட்டளையுடன் சுய முகவரியிட்டு ரூபா 12/- பெறுமதியுடைய முத்திரையொட்டப்பட்ட 28×20 செ.மீ. அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

1990/91 கல்வியாண்டிற்காக ஏற்கனவே பதிவு செய்துள்ளோருக்கு இவ்வறிவித்தல் ஏற்புடையதல்ல.

பதிவாளர்

05015 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். 08-05-1992

## அரச அதிபர்கள் கூட்டம்

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள அரசாங்க அதிபர்களுக்கான விசேட கூட்டம் எதிர்வரும் 20, 21 ஆம் திகதிகளில் ஹபரணையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ். அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகரும் கலந்து கொள்வார் என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (47)

★ ஆப்கானில் கிளர்ச்சியாளர் அரசு அமைந்த காரணம்?

# காஷ்மீருக்கு கூடிய சுயாட்சி

# வழங்க இந்திய அரசு தயார்!

காஷ்மீருக்கு எவ்வளவு சுயாட்சி வழங்க முடியுமோ அந்தளவுக்கு வழங்க மத்திய அரசு தயாராக உள்ளது என அம்மாநில ஆளுநர் சக்சேனா புதிய அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

காஷ்மீரை இந்தியாவிலிருந்து பிரிந்து செல்ல அனுமதிக்கமுடியாது எனினும் காஷ்மீர் தீவிரவாதிகள் பேச்சுகள் மூலம் அதிக சுயாட்சியை பெற்றுக் கொள்ளலாம்.

ஆப்கானிஸ்தானில் கிளர்ச்சியாளர்கள் முஸ்லிம் அரசு ஒன்றை நிறுவியிருப்பதால் காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு அது சாதகமாகும் என வெளியாகும் செய்திகளை ஆளுநர் சக்சேனா மறுத்தார்.

ஆப்கான் கிளர்ச்சியாளர்களுக்கு தங்கள் நாட்டை கவனிக்கவே நேரம் போதாது என அவர் கூறினார்.

காஷ்மீர் கிளர்ச்சியாளருக்கு இதுவரை ஆப்கானிஸ்தான் தீவிரவாதிகள் உதவி வழங்கி வந்ததும் இப்போது ஆப்கானில் கிளர்ச்சிக் குழுக்கள் ஆட்சி அமைத்துள்ள நிலையில் காஷ்மீர் ஆளுநரின் சுயாட்சி அறிவிப்பும் அவதானிகளால் சுட்டிக்காட்டப்படுகிறது.

## கறுக்காய்த்தீவில் பல வீடுகள் சேதம்

இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட பூநகரியைச் சேர்ந்த கறுக்காய்த்தீவுக் கிராமத்தில் நூற்றுக்கும் அதிகமான வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கறுக்காய்த்தீவுக் கிராமத்தில் 35 வீடுகளும், செட்டிய குறிச்சிக் கிராமத்தில் 17 வீடுகளும் இராணுவத்தினரால் குண்டுகள் வைத்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளதுடன் இங்குள்ள சனசமூகநிலையங்கள், சிறுவர் பாடசாலைகள் உட்பட பல வீடுகள் கதவு, யன்னல்கள் கழட்டப்பட்டும் கட்டடம் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

இதேவேளை இப்பகுதியிலுள்ள வீதிகளில் பாரிய குழிகள் தோண்டப்பட்டு பாவனைக்குதவாத நிலைக்குள் ளாக்கப்பட்டுள்ளதுடன் பெருமளவு பயன்தரு பனை மரங்களும் வெட்டி அழிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது (45)

## எழுதுவினைஞர் பதவி நியமனம் அரச அதிபர் நடவடிக்கை

மத்திய அரசாங்கத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் இயங்கும் அரச திணைக்களங்களின் வெற்றிடங்களை நிரப்புவது குறித்து பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருடன் யாழ். அரசாங்க அதிபர் தொடர்பு கொண்டுள்ளார். (25

## 500 மெ. தொ. உணவுப்பொருள் காங்கேசனில் உள்ளன

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் 500 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் மட்டுமே இருப்பதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

லொறிகள் மூலம் தினமும் 100 மெ. தொன் உணவுப் பொருள்களே யாழ்ப்பாணம் எடுத்துவரப்படுவதாகவும் இன்னும் சில நாள்களில் அங்கிருந்து உணவுப் பொருள்கள் முழுமையாக யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டு விடும் என்றும் அவ்வட்டாரம் மேலும் தெரிவித்தது. 47

இணையமைச்சர் சபையில் அறிவிப்பு

## கூட்டத் தொடரில் இனியும் போபர்ஸ் விவகாரம் இல்லை

போபர்ஸ் பீரங்கிப்பேர ஊழல் விவகாரத்தினால் நேற்று இந்திய பாராளுமன்றம் மூன்று முறை ஒத்திவைக்கப்பட்டது. எதிர்க் கட்சியினரும் ஆளுங்கட்சியினரும் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இப்போதைய கூட்டத் தொடரிலேயே போபர்ஸ் விவகாரம் 8 தடவை விவாதிக்கப்பட்டு விட்டது. மேற்கொண்டு விவாதிக்க வேண்டியதில்லை என பாராளுமன்ற அலுவலக அமைச்சர் ஆசாத் கூறினார். சபா விதிப்படி இனியும் இது தொடர்பாக விவாதிக்க முடியாது என இணையமைச்சர் குமாரமங்கலம் சுட்டிக் காட்டினார்.

## மேர்கன்டைல் நிதிக்கம்பனி பயப்படத் தேவையில்லை

மேர்கன்டைல் கிறடிற் லிமிடெட் நிதிக்கம்பனி புதியநிர்வாகம் அதனை திறமையாக இயக்குவதாக மத்திய வங்கி ஆளுநர் ஜெகி குணதிலக்க தெரிவித்தார்.

இந்தக்கம்பனி இலங்கையில் மூன்றாவது பெரிய நிதிக்கம்பனி எனவும் இதில் இருபதினாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பணவைப்புச் செய்துள்ளனர் எனவும் அவர் சொன்னார்.

இதனால் இதன் வாடிக்கையாளர்கள் பயப்படத் தேவையில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். 06

## வேலணை கோட்டத்தில் ஆசிரியர் சுயவிவரக் கோவை

யாழ். கோயில் வீதியில் இயங்கும் வேலணைக் கோட்டக் கல்வி அலுவலகத்தினால் தீவக ஆசிரியர்களின் சுயவிவரக் கோவைகள் புதிதாக தயாரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இராணுவம் தீவகத்தில் இருப்பதனால் ஆசிரியர்களின் சுயவிவரக் கோவைகளை அங்கிருந்து பெறுவது சிரமமாக உள்ளதால் இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் கற்பிக்கும் தீவக ஆசிரியர்களிடம் உள்ள சகல தஸ்தாவேஜுகளின் பிரதிகளைப் பெற்று இந்த சுயவிவரக் கோவைகள் தயாரிக்கப்படுகின்றன.

பயிலுநர் ஆசிரியர்களாக கடமையாற்றுபவர்களினது சுயவிவரக் கோவைகளும் தயாரிக்கப்படுகின்றன 15

நூன்...

பிடித்துவிடுவர்" என்பதாகும்.

இதை அவர் அந்நாட்டு பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் எள்ளிநகையாடலுக்கு இடையில் வெளிப்படையாக அறிவித்தார்.

சமரஸ...

விஜயத்தை புலிகள் எதிர்க்கவில்லை என்றும் தெரிவித்திருந்தது.

பாராளுமன்றத்திற்கான யாழ் மாவட்ட 9 உறுப்பினர்களின் பதவியும் வெற்றிடமாகவே உள்ளது. இதற்காக இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

இந்திய...

நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தார்.

இது தொடர்பாகவே உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் தமிழக அரசை இவ்வாறு எச்சரித்துள்ளது.

உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு வேண்டுமென்றே புறக்கணிக்கப்படுவதாக உயர் நீதிமன்றம் கருதுகிறது என எச்சரித்துள்ள நீதிபதிகள், நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக நடந்து கொள்ளுமாறு தமிழக உள்துறைச் செயலர் பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளனர்.

உயர்நீதிமன்ற உத்தரவுகளுக்கு அனைவரும் கட்டுப்பட வேண்டும் என அரசியல் பிரிவைச் சுட்டிக்காட்டியுள்ள உயர் நீதிமன்று, இதற்கு அமைவாக அதிகார பொறுப்பில் உள்ளவர்கள் நடந்து கொள்வர் என நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இதனிடையே தமிழக சட்டப்பேரவையினால் பிறப்பிக்கப்பட்ட கைது ஆணையை எதிர்த்து மாலைமுரசுப் பத்திரிகை ஆசிரியர் தாக்கல் செய்திருந்த மனு தொடர்பான தீர்ப்பு இன்று வெளியிடப்படவுள்ளது.

தென்பகுதி...

(அனுராதபுரம்), அந்தனி நேமன் பீரிஸ் (குருநாகலை), தில்லை சுவாம்பிள்ளை (திருகோணமலை - மட்டக்களப்பு) தோமஸ் சவுந்தரநாயகம் (மன்னார்) ஆகியோரே இங்கு வரும் ஆயர்களாவர்.

இவர்கள் யாழ்ப்பாணத்தின் நிலைமைகளை நேரில் கண்டறிவார்கள் எனவும். விடுதலைப் புலிகளையும் சந்தித்துப் பேசுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார்...

கருங்கண்டல், வட்டக்கண்டல் உயிலங்குளம், சிறுநாவற்குளம் ஆகிய இடங்கள் வரை சென்ற படையினர் 4ஆம்நாள் புலிகளின் புதிய பல முனைத் தாக்குதல்களில் சிக்கியதைத் தொடர்ந்து பலத்த இழப்புகளுடன் படையினர் முகாம்களுக்கு தப்பியோட ஆரம்பித்தனர்.

இரண்டாம் நாள் தாக்குதலில் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி படையினரின் 03 வாகனங்கள் சிதறின படையினர் பலரும் ஜொனி மிதிவெடிகளில் சிக்கினர் எனத் தெரிவித்த கயன், பெரும் எடுப்பிலான இந்த இராணுவ நடவடிக்கையை புலிகள் எவ்வித இழப்புமின்றி முறியடித்ததை சுட்டிக்காட்டினார்.

முருங்கன் பகுதியில் எல்லைக் கருகிலேயே தாக்குதலுக்கு முடியாது முகாமிற்கு தப்பியோடிய படையினர். பின்னர் புலிகளின் எதிர்ப்பின்றி முருங்கனை கைப்பற்றியதாக அறிவித்ததை அவர் அப்போது சுட்டிக்காட்டினார்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 08-05-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது